1981 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மூர் மார்க்கட் கட்டிடம் உள்பட 42.03 ஏக்கர் நிலம் தென் பிராந்திய ரயில்வேக்கு மாற்றம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த நிலத்தைக் காலி செய்து இரயில்வேக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வியாபாரி களுக்கு மாற்று இடம் அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* வினா எண். 878—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது 'மூர் மார்க்கட்' உள்ள இடத்தை இரயில்வே இலாகாவிற்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அங்கு வணிகம் செய்பவர்களுக்கு வேறு இடம் ஏதும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அங்கு வணிகம் செய்பவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியை இடிப்பதற்கு முன்பு இந்தக் கட்டிடத்தை இடிக்கக் கூடாது என்று ஏதாவது ஒரு ஷரத்து அதிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியை இடிக்கக் கூடாது என்று ஷரத்து இருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றிய குறிப்புகளும் இல்லை. அந்த மூர் அங்காடியைக் காலி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என்பதை மட்டும்தான் இந்த நேரத்தில் சொன்னேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூர் அங்காடியிலே இருக்கின்ற வணிகர்கள் நீண்ட நெடும் நாட்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அங்கு எத்தனை கடைகள் இருக்கின்றன. மாற்று இடங்கள் கொடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்தை அரசு தேர்வு செய்திருக்கிறது? அதனை அந்த வணிகர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த கடைகளினுடைய எண்ணிக்கை 1,492 ; இதில் உடனடியாக காலி செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை 752. ஆகவே இவர்களுக்கு கண்ணப்பர் திடல், 'சைடன்ஹேம்ஸ்' ரோடு ஆகிய பகுதிகளிலே கடைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இதுகுறித்து பல்வேறு சங்கங்களை கூட்டி வைத்து நானே நேரில் பேசி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கும் இடம் மத்திய சர்க்காருக்கு மாநகராட்சி இலவசமாகக் கொடுத்திருக்கிறதா? இல்லை, பணம் வாங்கி கொடுத்திருக்கிறதா? பணம் வாங்காது கொடுத்திருக்கிறது என்றால் இதனால் ஏதாவது பெரிய திட்டம் தென்னகத்திற்கு ரெயில்வே துறையினரால் வர இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தை இரண்டு கோடியே எழுபது இலட்சம் ரூபாய்க்கு நாம் கொடுத்திருக்கிறோம். It is a concessional rate; 42 ஏக்கர், ஆகவே இரண்டு கோடியே எழுபது இலட்சம் என்பது concessional rate தான். அதேபோல இப்போதிருக்கிற வியாபாரிகளுக்கு மாற்று இடமாக 'வில்லி பாண்ட்' என்ற அல்லிக்குளத்திலே பலமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டு அங்கு அது வெகு சிக்கிரமாக நடைமுறைப்படுத்த விருக்கிறது. அதற்காக மதிப்பீடு ஒன்பது கோடியிலிருந்து பத்து கோடி ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருக்கு மிகுந்த குறைவு விலையில் கொடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் நன்றி. இந்த பலமாடிக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும். ஏனென்றால் இது அவர்களுக்குக் கிடைத்து விடுமேயானால் இங்கே இருக்கிற வணிகர்கள் அங்கே போய் வணிகம் செய்வதற்கு அதிக காலம் ஆனாலும் ஆகும். இடைக் காலத்தில் அப்படி வியாபாரம் தடைபடாமல், வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. பல மாடிக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல உடனடியாக காலி செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை 752 ; அதற்கு பின்னர் காலி

1981 ஏப்ரல் 25]

செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 700-க்கு மேல் இருக்கிறது. அவர்கள் எல்லோரும் 'பெர்மெனென்ட்' ஸ்டால்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த லில்லி பாண்ட், அல்லிக் குளத்திலே பலமாடிக் கட்டிடம் கட்டிய உடனே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதற்குப் பின்னாலேதான் காலி செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1,400 கடைகள் அங்கு இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் புழங்குகின்ற இடம் 42 ஏக்கர் என்றும் சொன்னார்கள். அதற்கு ஏற்றாற்போல 42 ஏக்கருக்கு மாற்று இடம் எந்த இடத்தில் இருக்கிறது. எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது? ஏனென்றால் 42 ஏக்கர் இங்கே உள்ள இடம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்போல கட்டிடம் கட்டுகிறோம் என்று சொல்லப்பட்டதே தவிர, 42 ஏக்கருக்கு எங்கே போவது ?

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, உடனடியாகக் காலி செய்ய வேண்டியவர்கள் 750 பேர்கள்தான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மாற்று இடம் எங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? (பதில் இல்லை).

(முற்பகல் 9-30)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூர்மார்க்கட் என்பது பிரசித்திபெற்ற இடம். மத்திய அரசாங்கத்திற்கு ரொம்பவும் குறைந்த விலையில் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் குறைந்த விலையில் தான் வாங்குவார்கள். நாம் வாங்குவதற்குத்தான் அதிகமான விலை தரவேண்டும். அங்கே கடை வைத்திருக்கின்றவர்கள் அனைவருக்கும் கடைகள் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சிலருக்குத்தான் வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதே, அப்படியில்லாமல் அங்கே கடை வைத்திருக்கின்றவர்கள் அனைவருக்கும் கடைகளைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் 1,492 கடைகள் அங்கே இருக்கின்றன. உடனடியாக காலி செய்யப் படுகின்றவை 752. கணைப்பர் திடலில் ஒதுக்கப்பட்டு இருப்பவை 413. பாக்கி யிருப்பவர்களில் சிலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருகிற ஜூன் மாதத்திலே எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

[1981 ஏப்ரல் 25

திரு. சு. பாலன் : தற்போதுள்ள மூர் அங்காடி மக்களுடைய நலனைக் கருதி, மக்களுக்குத் தேவைப்படுகின்ற பல்வேறு உணவுப் பொருட்களையும் விற்கிற முறையில் பறவை இனம் தனியாகவும், மாமிச இனம் தனியாகவும், காய்கறிகள் தனியாகவும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூர்மார்க்கட்டிலே என்ன என்ன விற்கிறது என்று ஆரம்பித்தால் எங்கே போய் முடியும் ? (சிரிப்பு).

திரு. சு. பாலன் : தனித்தனியாக கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன, அதைப்போலவே புத்தகங்களுக்குத் தனியாகவும் மற்ற மற்ற பொருட்களுக்குத் தனித்தனியாகவும் கடைகள் அமைத்து விற்கப்படுகின்றன. அந்த அமைப்புகள் மாறாத நிலைமையில் அவைகளை மனதிலே கொண்டு அந்த வடிவத்திலேயே அங்கே அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அங்கே கடைகள் வைத்திருக் கின்றதைக் கவனமாகக் கொண்டுதான் கடைகள் பிரித்துக் கொடுக்கப்படு கின்றன.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : கண்ணப்பர்திடலிலே மாற்றியமைக்கப் படக்கூடிய கடைகளை மேல்நாடுகளில் உள்ளதைப்போல் நவீனமுறையிலே, டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் என்ற முறையிலே அமைக்க அரசு முன்வருமா ? அப்படி அமைக்கப்படுகிறபோது பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயரை வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கண்ணப்பர் திடலிலே இப்போது இங்கே காலி செய்கிறவர்களுக்கு கடைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே நிரந்தரமான கடைகள் வைக்கப்படுகிறபோது யார் பெயரை வைப்பது என்பதுபற்றி முடிவு செய்யலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் பிரசித்தி பெற்ற மூர் அங்காடியைக் குறைந்த விலைக்கு நம்முடைய அரசு மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அதைப்போல் மாநில அரசுக்கு, மாநில அரசு கோரிய மத்திய அரசு நிலத்தை மத்திய அரசு குறைந்த விலையில் கொடுத்திருக்கிறதா ? சுற்றுலா பொருட்காட்சி நடத்தப்படுகிற இடத்தை மாநில அரசு கேட்டும் மத்திய அரசு கொடுக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இரயில் இலாகா விரிவாக்க திட்டத்திற்காகத்தான் நாம் அதைக் கொடுத்திருக்கிறோம். அந்தத் திட்டம் நமக்கு வருவது நல்லது. ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாயில் விரிவாக்கத்

1981 ஏப்ரல் 25]

திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள். வந்துபோகின்ற பயணிகளுக்கு ஏற்ப அமைகின்ற திட்டம், அதற்காக கொடுத்திருக்கிறோம், அதற்காக மாற்று இடம் அவர்கள் கொடுக்கவில்லை. அதற்காகப் பணம் பெற்றுக்கொண்டோம்.

தர்மபுரியில் குழந்தைகள் கலையரங்கம் கட்டும் திட்டம்

*வினா எண். 879—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகரில் குழந்தைகள் கலையரங்கம் ஒன்று கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, தர்மபுரி நகரத்திலே குழந்தைகள் கலையரங்கம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு வளர்ச்சிக் குழுவிலேயும் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்வதாக ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதனைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து கலையரங்கம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தற்பொழுது பரிசீலனையிலே இல்லை; பின்னாலே எடுத்துக்கொள்ளலாம்.

நாப்பாளையத்தில் மேம்பாலம் கட்டும் பணி

*வினா எண். 880—திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி தொகுதி மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாப்பாளையம் (பொன்னேரி நெடுஞ்சாலை) மேம்பாலம் பணி எப்போது துவக்கப்பட்டது?

(ஆ) அம்மேம்பால வேலை பாதி தூண்கள் வரை கட்டப்பட்டு நிற்பதற்கான காரணம் என்ன?

(இ) அது எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 8—12—1975.